சிறப்பிதழ்
Special Issue

2-ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*
*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*
*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019
தமிழ்த்துறை (தன்நிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)

முனைவர் த. கீதாஞ்சலி முனைவர் ந. பிரகாஷ் முனைவர் இரா. ஜெயந்தி
முனைவர் ம. சித்ரகலா முனைவர் மு. சுகந்தி பேரா. ர. சூர்யா பேரா. அ. மகபுபூ
தமிழ்த்துறை (தன்நிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி -6

*Published by*
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

4 பகுதி-2
சிறப்பிதழ்
Special Issue

ISSN : 2321-0737


| | | | |
|---|---|---|---|
| 61. | அ. ஜாஸ்பின் ஷீலா | "கிணற்றில் விழுந்த தீண்டாமை" சிறுகதைத் தொகுப்பில் மனிதநேய மாண்புகள்" | 210-213 |
| 62. | செ. ஐஸ்வர்ய சுகிலா & ஜே. ஜெயரதி பொன்மலர் | கனிமொழியின் அகத்திணை கவிதையில் பெண்நிலை | 214-217 |
| 63. | ஜீ. பாண்டியலட்சுமி | சிலப்பதிகாரத்துள் காணலாகும் மாண்புடைமனிதர்கள் | 218-221 |
| 64. | அ. சஜன் | ஜி. நாகராஜனின் குறத்தி முடுக்கு நாவலில் பரத்தையர் | 222-224 |
| 65. | ப. சவிதா | அகமரபுகள் நோக்கில் சம்பந்தர் பாடல்களும் மனிதநேயமும் | 225-229 |
| 66. | திரு. ஆ.சந்திரசேகர் | "அட்டகுளத்திலும்ஒட்டிக்கொள்ளும் ஆம்பல்கவி" | 230-232 |
| 67. | எம்.மெஹ்முதா | 101 மனுஷ்யபுத்திரனின் கவிதைகளில் மனித நேயம் | 233-237 |
| 68. | செ.மகேஸ்வரி | தமிழர் பண்பாட்டில் பசிப்பிணி போக்கும் மனிதநேய மாண்புகள் | 238-242 |
| 69. | தி.சுமதி & ப.சக்தி குமாரவேல் | வேதாத்திரிய நோக்கில் குடும்பச் சீர்திருத்தச் சிந்தனைகள் | 243-246 |
| 70. | சு.பாத்திமா | ப.க.பொன்னுசாமியின் 'படுகளத்தில்' மனிதநேயம் | 247-250 |
| 71. | மா.நடராசன் | இராமலிங்க வள்ளலாரின் மனிதநேயச் சிந்தனைகள் | 251-254 |
| 72. | கு.ஜெயந்தி | சங்க இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 255-258 |
| 73. | ந.ஜெயவசந்தி | புறநானூற்றில் மனித நேய பண்புகள் | 259-262 |
| 74. | கோ.ஜெமிலா | புறநானூற்றில் மனிதநேயப் பண்புகள் | 263-265 |
| 75. | செ.கிளாறா டெல்பின் ஜடா & நா.ரா.ஷிபஜா | கிறிஸ்தவ இலக்கியத்தில் இடம்பெறும் திருநங்கைகளின் மனிதநேயம் | 266-268 |
| 76. | நா.பன்னீர்செல்வம் | தமிழ் இலக்கியங்களில் காணும் மனிதநேய மாண்புகள் | 269-273 |
| 77. | தெ.சந்திரா | நீதி இலக்கியங்கள் உணர்த்தும் மனிதநேயம் | 274-276 |
| 78. | தெ.சந்திரா | சங்க இலக்கியத்தில் மனிதநேயம் | 277-280 |
| 79. | தமிழ்செல்வி.த | அஃறிணை உயிர்களிடத்தில் மனிதநேயம் | 281-283 |
| 80. | ச.குருஞானாம்பிகா | சங்க இலக்கியத்தில் மனிதநேயம் | 284-286 |
| 81. | சு.பிரியதர்ஷினி | கண்ணகியின் மனிதநேயம் | 287-290 |
| 82. | மு.சௌந்தரியா | கலித்தொகைத் தலைவியின் மனிதநேய மாண்புகள் | 291-294 |
| 83. | மோகனப்பிரியா.ச | கம்பராமாயணத்தில் இராமனின் மனிதநேயம் | 295-297 |
| 84. | த.திலகவதி | சூரியகாந்தன் நாவல்களில் மனிதநேயம் | 298-301 |
| 85. | ப.பத்மா & காசிபட்டா சத்யமூர்த்தி | பக்திஇலக்கியங்களில் மனிதநேய மாண்புகள் | 302-306 |
| 86. | வானதிபகீரதன் | ஈழத்துசிறுவர் பாடல்களில் உயிர்களிடத்தில் அன்பும் மனிதநேயமும் | 307-310 |
| 87. | கா.மகேசுவரி | புறநானூற்றில் மனிதநேய விழுமியங்கள் | 311-313 |
| 88. | மு.செந்தமிழ்ச்செல்வி | மூதின் முல்லைப் பாடல்களால் மானுடம் | 314-316 |
| 89. | K.சாந்தி முனைவர் & C.விஸ்வநாதன் | சித்தர் இலக்கியத்தில் மனித நேயப்பண்புகள் | 317-321 |
| 90. | த. கீதாஞ்சலி | கடையெழுவள்ளல்களின் மனிதநேயமாண்புகள் | 322-325 |
| 91. | தங்கராசா கோபிநாத் | சுப்பிரமணிய பாரதியாரது தேசபக்திபாடல்களில் மனிதநேயம் | 326-329 |
| 92. | சி.அமுதா | எட்டுத்தொகை அகப்பாடல்களில் தொழில்சார் மனிதநேயம் | 330-333 |
| 93. | இரா.இரமேஷ் | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 334-340 |
| 94. | கா. திருநாவுக்கரசு & செ.விஸ்வநாதன் | கம்பன் வடித்த இராவணன்பாத்திரமும் பேராண்மை அறமும் | 341-345 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# புலமையும் மனிதநேயமும்

முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்(சுயநிதி),
தமிழ்த்துறை, என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி.

சங்ககாலப் புலவர்கள் மக்கட் பண்பு நிறைந்த ஒழுக்க வாழ்வினராகவும் பரந்த மனப்பான்மை உடையவராகவும் வாழ்ந்தனர். அவர்கள், தன்மானத்தை உயிரென மதித்தனர். பொறாமையற்ற புனிதப் பண்பினராகவும், நட்பின் பெருமையை நிலை நாட்டும் நல்லோராகவும் வறுமையிலும் செம்மையைப் போற்றியோராகவும் விளங்கினர். நாடாளும் மன்னர்களுக்கு அறிவுரை வழங்குவதிலும், அவர்களின் இல்லற ஒழுக்க வாழ்வைச் செம்மைப்படுத்தக் கூடியவர்களாகவும் வாழ்ந்துள்ளனர். தம் பரிசிலை மட்டும் நோக்காது பிறருக்குத் தம்மிடம் உள்ள பொருட்களைப் பகிர்ந்து கொடுப்பதிலும் முதன்மை பெற்றவர்களாக இருந்துள்ளனர்.

மன்னன் தம்மிடம் உள்ள பொருளைக் கொடுக்காமல் காலம் தாழ்த்தி இருக்கின்ற சூழ்நிலையிலும் அம்மன்னனைக் குற்றம் சாட்டி வசை பாடாது வாழ்த்தியும் உள்ளனர். இச்சங்ககாலப் புலவர்களில் ஒவ்வொரு புலவர்களும் மற்றொரு புலவர்கள் மீது அன்பை உடையவர்களாக இருக்கின்றவர்களாகவே காணமுடியுமே அன்றி பொறாமை கொள்ளும் பண்பை உடையவர்களாக இருத்தல் இல்லை.

இப்படிப்பட்ட சங்ககாலப் புலவர்களின் மனதில் நிறைந்துள்ள அன்பையும், அவ்அன்பின் வெளிப்பாடான மனித நேயப் பண்புகளையும் எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைந்து நிற்கின்றது.

**புலவர்கள்**

"புலவர் என்றால் அறிவுள்ளவர் என்று பொருள்" தந்நலத்திற்காக மட்டும் பாடுபடாமல் நாட்டு மக்கள் நன்மைக்காவே பணிபுரியும் அனைவரையும் புலவர்கள் என்றபெயரால் அழைக்கலாம்" (இலக்கியம் என்றால் என்ன,ப.87) என்று சாமி. சிதம்பரனார் அவர்கள் புலவர் என்னும் சொல்லிற்கு விளக்கம் அளிக்கின்றார்.

"அறிவு என்னும் ஒன்றே மக்கட் பிறப்பின் சிறப்பியல்பு. மக்களாய்ப் பிறந்தவர், அறிவைத் தேடி உழைத்தல் வேண்டும் அறிவைப் பிறர்க்கு அளித்தல் வேண்டும் அறிவின் பயனால் இன்புறல் வேண்டும் இதுவே மக்களின் வாழ்வு. இவ்வாழ்வில் சீர் பெற வாழ்பவரே புலவர் பெருமக்கள்" (தமிழ் நெஞ்சம்,ப.98) என்று டாக்டர் மு.வரதராசன் அவர்கள் புலவர்களைக் குறிப்பிடுகின்றார்.

"புலமைக்குப் பெருமையும், மதிப்பும் இருந்தகாலம் சங்க காலம், சங்க காலப்புலவர் வாழ்வு செம்மையுடையது சீர்மிகு பண்புடையது" (புறநானூறு ஒரு புதியபார்வை, ப.67) எனச் சங்ககாலத்தையும், புலவர்களின் பண்பு நிலை குறித்தும் முனைவர் இராம.குருநாதன் அவர்கள் விளக்குகின்றார்.

"வறுமையுள் செம்மை என்பதும், பெற்ற பொருளைப் பிறர்க்கென வழங்கியும், தொடர்ந்து ஆற்றுப்படை பாடிப் பொருள் பெறுவதும் புலவர் தம் வாழ்க்கையாக இருந்துள்ளது" (கொங்கும் தமிழும்,ப.63)என்று முனைவர் இரா.கா. மாணிக்கனார் புலவர்களின் வாழ்வை எடுத்துரைக்கின்றார்.

"நாடாளும் தலைவர்கள், இலக்கியம் இயற்றும் புலவர்களையே விழுமியோராகப்

போற்றி வந்தனர். அரசனை 'அவன்' என்றும் புலவரை 'அவர்' என்றும் சுட்டியதில் உள்ளது நாகரிகமதிப்பு, அரசியலில் தலையிட்டு அறிவுரை கூறியும் அறவுரை நல்கியும் அரசரின் போக்கைத் திருத்தும் உரிமை புலவர்க்கு இருந்தது. அரசர், குறுநில மன்னர் ஆகியோரின் குடும்ப வாழ்விலும் புலவர் தலையிட்டு ஆவன செய்யும் ஆர்வம் கொண்டிருந்தனர்" (மேற்கோள், டாக்டர்.அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.56) என்று மு.வரதராசனார் கூறுவது இங்கு நோக்கத்தக்கதாகும்.

மேலும்,

**"தேவர் அனையர் புலவரும் தேவர்**
**தமரனையர் ஓரூர் உறைவார் –**
**தமருள்ளும் பெற்றன்னர் பேணி**
**வழிபடுவார் கற்றன்னர்**
**கற்றாரைக்காதலவர்"**

என்ற நான்மணிக்கடிகையின் வரிகளும் புலவர் பெருமக்களை தேவர்களுக்கு இணையாக ஒப்பிட்டுச் சிறப்பிக்கின்றது.

புலவர் என்னும் சொல்லிற்கு, அவை, அறிஞர், ஆன்றோர், கலைஞர், கவிகள், கவிஞர். கற்றோர், சங்கம், சவை, சீரியர், சூரி, நாவலர், பண்டிதர், பருணிதர், பாவலர், புதர், புந்தியர், புலமையர், முதுவர், மூத்தோர், மேதையர், மேலோர், விசாதரதர், விற்பன்னர், அவையோர்"(ப.281) என வீரமாமுனிவர் சதுரகராதி விளக்கம் அளிக்கின்றது.

புலவர் என்னும் சொல்லிற்கு அறிஞர், கம்மாளர், கவிவாணர், குறுநில மன்னர், கூத்தர், தேவர், புதன், பொருநர், புலமையோர்" (ப.631) என்றும் கழகத் தமிழ் அகராதி விளக்குகின்றது.

கபிலர்

கபிலர் சங்க காலத் தமிழ்ப் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர். பாரியின் மீது நட்புக் கொண்டவர். இவர் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. "இவரது குலம், தமிழ்நாட்டு ஐந்திணை மக்களினின்றும் வேறாகத் தொல்லோரால் வகுக்கப் பெற்ற நாற்பாலுள்ளே அந்தணர் குலமாகும்" (கபிலர்,ப.60) என்று ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இவர் அந்தணரென்பது "புலனழுக்கற அந்தணாளன்"(புறம்.126:11) என்ற அடியாலும் இவர் பாரி மகளிரை விச்சிக்கோன், இருங்கோவேள் என்பவர்களிடம் கொண்டு சென்று, அவர்களை மணந்து கொள்ளுமாறு வேண்டியபொழுது, "யானே பரிசிலன் மன்னும் அந்தணர்" (புறம்.200:13) என்றும், "அந்தணர் புலவன் கொண்டு வந்தனனே"(புறம்.201:7) என்றும் தம்மைக்கூறிக் கொண்டிருத்தாலும் பெறப்படுகின்றது.

பலரும் புகழும் நல்ல புகழினையும். வாய்மை தவறாத மொழியினையும் உடையவர் கபிலர் என்பதை,

**"உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்இசை**
**வாய்மொழிக்கபிலன் ............................."**

(அகம்.78:15,16)

**"பொய்யா நாவின் கபிலன்"** (புறம்.174:10,11)

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

பசியைப் போக்குதல்

மூவேந்தரும் பாரியின் பறம்புமலை அரணை முற்றுகையிட்டபோது அதன் கண் உள்ளிருப்பவர்கள் உணவின்றி வருந்தினர். கபிலர் அங்குள்ள கிளிகளை வளர்த்துப் பழக்கி வெளியிலிருந்து முற்றிய நெற்கதிர்களைக் கொண்டு வரச் செய்தார். அங்கிருந்த மக்கள் அதனை ஆம்பல் மலரோடு சேர்த்துச் சமைத்துண்டு தமது பசியைப் போக்கிக் கொண்டனர் என்னும் செய்தியை,

"வாய்மொழிக் கபிலன் சூழ சேய் நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டு பல கழிய, வேண்டுவயிற் பிழையாது"

(அகம்.78:16-19)

என்ற வரிகள் தெரிவிக்கின்றன.

**பேகனுக்கு அறிவுரை கூறுதல்**

பேகனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாகக் கபிலர் பேகனிடம் சென்று, அவனைப் புகழ்ந்து பாடிஅவன் மனைவியின் துயரத்தை மறைமுகமாகக் கூறி அவளுக்கு அருள் செய்ய வேண்டுமென்று எடுத்துரைக்கின்றார் அருளத்தக்க அவள் தான் யாரோ? என்று அவள் அழுது புலம்பிய காட்சியை,

"யார் கொல் அளியன் தானே – நெருநல்
................................................
முலையகம் நனைப்ப விம்மி
குழல் இனைவது போல் அழுதனள் பெரிதே?"

(புறம்.143;7-15)

என்ற அடிகள் பதிவு செய்கின்றன.

அரசனைப் புகழ்ந்து பரிசில் பெறுவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாது அரசனின் குடும்ப நலனிலும் அக்கறை கொண்டு அவர்களின் துன்பத்தைப் போக்க இப்புலவர் நினைத்தது இங்கு மனிதநேயம் ஆகும்.

**விறலியை ஆற்றுப்படுத்துதல்**

வேள்பாரியைப் பாடிச் சென்றால் சிவந்த அணிகலன்கள் பலவற்றைப் பரிசாகப் பெறலாம் என்று கபிலர் விறலியை நோக்கிக் கூறுகின்றார். இதனை,

"சேயிழை பெறுகுவை -வாள் நுதல் விறலி
................................................
பாரி வேல் பாடினை செலினே"

(புறம்.105:1-8)

என்ற வரிகள் விளக்குகின்றன.

இவ்வாறு புகழ்பெற்று விளங்கிய கபிலரின் மனமானது, மற்றவர்களுக்கு உதவக்கூடிய வகையில் இருந்துள்ளது, இரக்கப்படும் தன்மை பெற்று விளங்குகின்றது என்பதைக் பொழுது மனிதநேயம் மிக்க புலவர் கபிலர் என்பது கண்கூடாகும்.

**பரணர்**

பரணர் தாம் பாடிய அகப்பொருள் பாடல்களில் அவர் காலத்தனவும், அவர் காலத்துக்கு முன்னர் நிகழ்ந்து தாம் அறிந்தனவுமாகிய பல வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிட்டுள்ளார். எனவே இவரை வரலாற்றுப்புலவா் எனப் போற்றிப் புகழ்கின்றனர். இவர் பாடியனவாக சங்க இலக்கியத்தில் 85 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவரும் கபிலரைப் போன்று சிறப்புப் பெற்றவர் ஆவார்.

**பேகனை அறிவுறுத்துதல்**

வையாவிக் கோப்பெரும் பேகன் தன்னுடைய மனைவி கண்ணகியைத் துறந்த போது கண்ணகிக்கு அருள்செய்ய வேண்டும் என்பதை உணர்த்த பாட்டின் தொடக்கத்திலேயே "அருளாய் ஆகலோ கொடிதே" (புறம்.144:1) என்று கபிலரைப் போல இவரும் குறிப்பிடுகின்றார். கண்ணகி அழுது புலம்பியதை,

"நீல் நறுநெய்தலின் பொலிந்த உண்கண்
கலுழ்ந்து, வார்அரிப்பனி பூண் அகம்நனைப்ப"

(புறம்.144;4-5)

என்ற வரிகள் எடுத்தியம்புகின்றன. அரசனின் இல்லற வாழ்க்கையில் புலவர்கள் தலையிடும்

உரிமை பெற்றுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

**பரணர் இரவலனை ஆற்றுப்படுத்துதல்**

வையாவிக்கோப்பெரும் பேகனிடம் செல்லுமாறு பரணர் இரவலன் ஒருவனை ஆற்றுப்படுத்தியதை,

**"பாணன் சூடிய பசும் பொற்தாமரை**
**மாண் இழை விறலி மாலையொடு விளஞ்க**
**கடும் பரி நெடுந்தேர் பூட்டு விட்டு அசைஇ,**
**ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்.**
**யாரீரோ? என வினவல் ஆனா,**

......................................................

**எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று என**
**மறுமை நோக்கின்றோ அன்றே,**
**பிறர், வறுமை நோக்கின்று, அவன் கை**
**வண்மையே"**

(புறம்.141:1-15)

என்ற வரிகள் தெரிவிக்கின்றன. வறுமையுடைய சுற்றத்தையும் மிகுந்த பசியையும் உடைய இரவலனை நோக்கி பேகனிடம் ஆற்றுப்படுத்துவதை இங்கு அறியமுடிகின்றது. மேலும்,

**"தங்கண் அமர்புடையார் தாம் வாழ்தல் முன்இனிதே**

......................................................

**பங்கமில் செய்கையராகிப் பரிந்து யார்க்கும்**
**அன்புடைய ராதல் இனிது"**

(இனியவை நாற்பது, பா.9:1-4)

என்ற பாடலுக்கு ஏற்ப யாவர்க்கும் இரங்கி அன்பு உடையவராக இருக்கின்ற பண்பு இப்புலவரிடம் இருப்பதைக் காணமுடிகின்றது.

**அரிசில் கிழார்**

சங்க காலப் புலவர்களும் ஒருவர். இவர் தம் இயற்பெயர் அறியுமாறில்லை. கிழார் என்னும் பெயரை நோக்க இவர் வேளாண்மரபினர் என்பது புலனாகின்றது. இப்பெயரிலுள்ள அரிசில் என்பது பற்றிப்பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. "சோழ நாட்டில் கொள்ளிடத்திற்கு வடபாலுள்ள அரியலூர் என்பதன் மரூஉ வெனச் சிலர் கருதுகின்றனர். மைசூர்ப் பகுதியிலுள்ள அரிசிற்கரை என்னும் ஊரே அரிசில் எனக் குறிப்பிடுப்பட்டது என்று கூறுவாருமுளர். சோழ நாட்டில் கும்பகோணத்திற்கு அருகில் காவிரியின் கிளை ஆறாகச் செல்லும் ஓராற்றின் கரையில் இருந்த ஒரூரின் பெயர் அரிசில் அன்பதும் அவ்வகையில் இப்புலவர் அரிசில் கிழார் எனப்பட்டார் என்பதும் கூறப்படுகின்றன" (தொகுதி-1,ப.743) என வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்து இவரால் பாடப்பட்டதாகும்.

கபிலர், பரணர், பெருங்குன்றூர்க்கிழார், மருதன் இளநாகனார், ஔவையார் போன்றோர் இவர் காலத்தில் வாழ்ந்த புலவராவர் புறநானூற்றில் 146, 230, 281, 285, 300, 304, 342 என ஏழு பாடல்களும், குறுந்தொகையில் ஒரு பாடலும் (193) இவர் பெயரில் அமைந்துள்ளன.

**பரிசில் வேண்டுதல்**

நின்னால் தரப்பட்ட பெறுதற்கரிய அணிகலனையும், செல்வத்தைப் பெறுதலையும்யாம் விரும்பவில்லை. யாம் செவ்வழிப் பண்ணை வாசிக்க அதனை நீ கேட்டு விரும்பி, நீ அருளாமையால், கண்டோர் இரங்க மெலிந்து அருந்துயரத்தால் வருந்துகின்ற நின் அரிவையைக் காணச் செல்வாயாக! விரைந்த வேகம் கொண்ட தேரை நின் குதிரைகள் பூண்பனவாகுக இதுவே யாம் வேண்டும் பரிசில் என்று வையாவிக் கோப்பெரும் பேகனைக் கண்ணகி காரணமாக அரிசில் கிழார் பாடியுள்ளார். இச்செய்தியை,

"அன்ன ஆக நின் அருங்கல வெறுக்கை..............................................................

வண்பரி நெடுந்தேர் பூண்க நின் மாவே!"

(புறம்.146;1-11)

என்ற வரிகள் உறுதிசெய்கின்றன.

தாம் பெறக் கருதும் பரிசில் தனக்கு மட்டும் உதவினால் அதனுடைய பயன் பெரிதல்ல. மற்றவர்களுக்கும் அப்பயன் கிடைக்க வேண்டும். அதுவே உன்னதமான பரிசாகும் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டியவர் இப்புலவர் ஆவார். கணவன் மனைவி இருவரையும் ஒன்றுபடுத்தி வாழவைப்பதே யாம் பெறக் கருதும் பரிசில் எனக்கூறுவது பேகனைக் கண்ணகியிடம் சேர்த்து வைத்து இல்லற வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவே என்பது தெளிவாகின்றது. சொந்த நலனை மட்டும் பார்க்காது நாட்டு நலனிலும் அக்கறை உடையவராக விளங்குவது இங்கு மனித நேயம் மிக்கதாகும்.

**கணியன் பூங்குன்றனார்**

இவ்வுலகில் பல விதமான சமயத்தைச் சார்ந்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களிடையே ஒற்றுமையுணர்வு தோன்ற இவரது பாடல் வழிவகை செய்கின்றது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மகிபாலன்பட்டி என்னும் ஊரே அன்றைய பூங்குன்றமாகும். அவ்வூரில் பிறந்த சோதிடத்தில் வல்லவரான கணியன் பூங்குன்றனார். எல்லா மக்களையும் தம்முடைய உறவினராகவும், எல்லோருடைய ஊரையும் தம்முடைய ஊராகவும் எண்ணினார். நன்மையும், தீமையும் பிறரால் வருவது அல்ல அது நாம் பிறர்க்குச் செய்ய எண்ணிய செயல்களின் எதிர்வினையே வேறல்ல என்று கூறுகின்றார். இதனை,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோரன்ன"

(புறம்.192;1-3)

என்று குறிப்பிடுகின்றார். இப்புலவரின் வரிகள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியால் மாஸ்கோ மாமன்றத்தில் "Every place is my place, Every man is my kins man என்று முழக்கம் செய்யப்பட்டது" (தமிழ்ப் பேழை,ப.54) என கவிஞர்.மீரா(க.ஆ) அவர்கள் குறிப்பிடுகின்றதையும் நாம் காணமுடிகின்றது.

சாதி, மதங்களில் பிரிந்திருக்கும் மனிதன் ஒன்றாக இணையவும், தாழ்வு மனப்பான்மை நீங்கவும், அடிமைத்தனம் ஒழியவும், உலக ஒற்றுமையை நிலைநிறுத்திய பெருமை இப்புலவரைச் சாரும் என்பது புலனாகின்றது. தமிழக எல்லையோடு நில்லாமல் உலகத்தோடு ஒப்பிட்டுக் கூறுவது சர்வதேசக் கண்ணோட்டம் உடையதாகும். மனித நேயம் மிக்கதும் ஆகும். எல்லோரையும் ஒன்றாக நினைக்கும் அன்புள்ளமே இங்கு சிறப்புப்பெறுகின்றது.

"வாழ்க்கைச் சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசையில் நிருபிக்கப்படுகின்றது. ஒன்று தொண்டு, மற்றொன்று அன்பு. தொண்டு உலகத்தைக் களிக்கச் செய்கிறது, அன்பு மனதைக் களிக்கச் செய்கிறது" (இரா.வைத்யநாதன், சிவஒளி,ப.19) என்ற காண்டேகரின் கூற்றிற்கு ஏற்ப எல்லோருடைய மனதிலும் ஒற்றுமையை ஊன்றியர் மனதில் அன்பை நிலை நிறுத்தியவர் கணியன் பூங்குன்றனார் என்பதை அறிய முடிகின்றது.

"வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம்; அடி

மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவோம்.

..............................................................

சிங்களத் தீவினுக்குகோர் பாலம் அமைப்போம்

சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்"

(பாரதியார் கவிதைகள்,ப.126)

என்று மாநிலம் பிரிவின்றி மக்கள் ஒன்றுபட்டு வாழ்கின்ற நிலையினைப் பாடிய பாரதிக்கு வழிகாட்டியாய் வாழ்ந்த இப்புலவரைத் தமிழுலகம் என்றும் போற்றும் என்பது வெளிப்படையான ஒன்றாகும். மேலும் "உலக நாடுகளுக்கும் உலகச் சமுதாயங்களுக்கும் இடையே உள்ள உறவுகள் வளரவளர உலகப் பொதுமைப்பண்பாட்டுக் கூறுகளும் வளருவது இயற்கை. இத்தகைய பொதுமைப் பண்பாட்டை நோக்கித்தான் உலகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது" (பண்பாட்டுக் கருத்தோட்டம், ப.10) என டாக்டர் பொற்கோ அவர்கள் குறிப்பிடும் கருத்து உலக முன்னேற்ற வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட இப்புலவரின் வரிக்கு ஏற்ப ஒப்பு நோக்கத் தக்கதாய் அமைந்து விளங்குகின்றதையும் காணமுடிகின்றது.

### ஆலத்தூர் கிழார்

ஊரினாற்பெயர் பெற்ற சங்கப் புலவர்களில் ஒருவர். ஆலத்தூரினராகிய இவர் அகம், புறமாய் இரு திணையையும் பாடியுள்ளார். புறநானூற்றில் ஐந்து பாடல்களும் (34,36,69,225, 324) குறுந்தொகையில் இரண்டு பாடல்களும் (112, 350) ஆக ஏழு பாடல்கள் இவர் பெயரில் அமைந்துள்ளன.

### போரைத் தடுத்து நிறுத்துதல்

கிள்ளி வளவனின் படை வீரர்கள் பகை மன்னனின் காவல் மரத்தை வெட்டினர். மரங்கள் வெட்டப்படும் ஓசையைக் கேட்டும் போரிட வராது தன் மாளிகையிடத்தில் பகைவன் இருப்பதை அறிந்த ஆலத்தூர்கிழார், அம்மன்னனிடம் சென்று நீ போரிடச் சென்ற பகைவன் வீரமற்றவன் - நின்னால் கொல்லப்பட்டாலும், கொல்லப்படா விட்டாலும் ஒன்றுதான். கோழையுடன் நீ போரிட்டால் அது உனக்குப் புகழ் தராது என்று கூறிப் போரைத்தடுத்து நிறுத்துகின்றார். இதனை ஆலத்தூர்கிழார்,

"அடுநை ஆயினும், விடுநை ஆயினும்
நீ அளந்து அறிதி, நின்புரைமை
...........................................................
சிலைத்தார் முரசம் கறங்க,
மலைத்தனை என்பது நாணுத் தகவு
உடைத்தே"

(புறம்.36:1-13)

என்ற வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

மேலும், காலைப்பொழுதிலும், மாலைப் பொழுதிலும் நின்னைப் பாடேனாயின், வாழ்நாளை உணர்த்தும் சூரியன் தோன்றுவதை நான் அறியாமற் போவேனாகுக என்று கூறுகின்றார். பெரிய மேகம் பொழிந்த நுண்ணிய பல நீர்த்திவலைகளினும் பல காலம் நீ வாழ்க என்றும் கிள்ளிவளவனை இப்புலவர் வாழ்த்துகின்றார். இதனை,

**"காலை அந்தியும், மாலை அந்தியும்
பீடுகெழுநோன் தாள் பாடேன் ஆயின்
படுபு அறியலனே பல் கதிர்ச் செல்வன்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல் துளியினும் வாரிய, பலவே"**

(புறம்.34; 8-23)

என்ற அடிகள் விளக்குகின்றன. இங்கு போரைத் தடுத்து நிறுத்தும் முயற்சியிலும், மன்னன் மீது புலவர் வைத்த அன்பிலும் மனிதநேயம் வெளிப்பட்டு நிற்கின்றது.

"உலகின் கண் மக்களிடையே உடைமை, இன்மை என்ற ஏற்றத்தாழ்வும், அதன் காரணமாகத் துன்பமும், வறுமையும் என்று தோன்றிற்றோ அவற்றைத்துடைக்க மக்களுள்ளத்தில் இரக்கமும் ஈகையும் என்று மலர்ந்தனவோ அன்றே தோன்றிவிட்டது மக்கள் தொண்டு அல்லது சமூக சேவையும்" (இலக்கிய இன்பம்,ப.17) என்று பேராசிரியர் அ.காமாட்சி குமாரசாமி அவர்கள் குறிப்பிடும் கருத்திற்கேற்ப மக்களின் துயரைப் போக்கத் தொண்டாற்றியவர் ஆலத்தூர்கிழார் என்பது புலப்படுகின்றது.

### கோவூர் கிழார்

சங்க காலப்புலவர்களில் தலைசிறந்தவர் கோவூர்கிழார். இவர் கோவூர் என்னும் ஊரினைச் சார்ந்தவர். இவ்வூர் செங்கற் பட்டினைச் சார்ந்தது. வேளாண் மரபினைச் சார்ந்தவர் அஞ்சா நெஞ்சினை உடையவர். அனைவரும் மன ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பது இவரது உயிர்க் கொள்கையாகும். நாடாளும் மன்னர்களே ஆயினும் அவர்களின் சீற்றத்தைத் தணித்து, அவர்கள் தம்மனதில் கொண்டிருந்த தவறான கருத்தினை மாற்றி, நல்வழிப்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டவர் என்பது அவருடைய புறப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது. கோவூர்கிழார் பாடியனவாகச் சங்க இலக்கியத்துள் பதினாறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றில் பதினான்கு பாடல்களும், குறுந்தொகையில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றும் ஆக அவை இடம் பெற்றுள்ளன.

### எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்

நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் தாம் ஒரே குடியினராய் இருந்தும் பகை கொண்டனர். நலங்கிள்ளி பகை காரணமாக நெடுங்கிள்ளி ஆளும் உறையூரை முற்றுகையிட்டான். அப்போது கோவூர் கிழார், நின் பகைவன் பெரிய பனையின் வெண்மையான தோட்டினை மாலையாக அணிந்த பாண்டியனும் சேரனும் அல்லன், வேம்பின் மலர்களை மாலையாக அணிந்த பாண்டியனும், அல்லன் உன்னுடைய மாலையும் ஆத்தி மாலை, உன்னுடன் பகை கொண்டு போரிடுபவனின் மாலையும் ஆத்திமாலையே. உம்முள் எவர் தோற்றாலும் தோற்பவர் உம் சோழர் குடியினரே நீங்கள் இருவரும் ஒருசேர வெல்லுதல் உலக இயல்பன்று. உம்செயல் உம்முடைய குடிப்பெருமைக்கு உரியதன்று. உங்கள் பகைவர்களாக உள்ள பாண்டியர்களுக்கும் சேரர்களுக்கும் இத்தோல்வி பெருமகிழ்ச்சியையே ஊட்டும்.

ஆதலின் நீங்கள் செய்ய இருக்கின்ற கொடும் போரை நிறுத்துங்கள் என்று அருள் உணர்வோடும், அற உணர்வோடும் எடுத்துரைக்கலானார். இக்கருத்தை,

> "இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
> கருஞ் சினை வேம்பின் தெரிய லோன் அல்லன்
>
> ..............................................................
>
> நும் ஓர் அன்ன வேந்தர்க்கு
> மெய்ம்மலி உவகை செய்யும் இவ்இகலே"
> (புறம்.45:1-9)

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

மக்கள் நலம் கருதியும், குடி நலம் கருதியும் கோவூர் கிழார் செய்த இந்த முயற்சியால் நாட்டில் அமைதியும் குடியில் அமைதியும் ஏற்படும் எனலாம். மன்னர்களிடம் பரிசில் பெறுவதுதான் புலவர்கள் தொழில் என்றில்லாமல் அவர்கள் குடிமக்களுக்கு இழைக்கும் துன்பங்களைத் தடுக்கும் முயற்சியில் சிறிதும் தயங்காமல் புலவர்கள் ஈடுபட்டிருந்ததையும் இங்குக் காணமுடிகின்றது. இப்போரில் சோழன் முற்றுகையிட்டபோது மக்களும், விலங்குகளும் துன்பப்பட்டதை,

> "அலமரம் யானை உரும் என முழங்கவும்
> பால் இல்குழவி அலறவும். மகளிர்
> பூ இல் வறுந்தலை முடிப்பவும்"(புறம்.44;5-7)

எனக் கூறுகின்றார். இதன் மூலம் இப்போரைத் தடுத்து நிறுத்துகின்றார்.

### புலவரின் உயிரைக் காத்தல்

இளந்தத்தனார் என்னும் பழம்பெரும் புலவர் பரிசில் பெறும் நோக்கில் சோழன்

நெடுங்கிள்ளியை அணுகினார். ஆனால் நெடுங்கிள்ளியோ, சோழன் நலங்கிள்ளியின் ஒற்றன் என நினைத்துக் கொல்ல முற்பட்டான். இதனை அறிந்த கோவூர் கிழார். உடனே அங்கு சென்று அதனைத் தடுத்து நிறுத்தி பரிசிலரின் வாழ்க்கைச் சிறப்பை எடுத்துக் கூறியதோடு அச்சோழ மன்னனைப் போன்ற தலைமைச் சிறப்பை உடைய புலவர்களின் வாழ்வையும் எடுத்துரைக்கின்றார். இதனை,

**"மண் ஆள் செல்வம் எய்திய
நும் ஓர் அன்ன செம்மலும் உடைத்தே"**
(புறம்.47;10-11)

என்ற வரிகளில் காணமுடிகின்றது. மேலும் இப்புலவர்களின் வாழ்க்கை பிறருக்குத் தீமை புரியாத தன்மைஉடையது என்பதை,

**"வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்றே"**
(புறம்.47;6-7)

என்ற வரிகளில் அறியமுடிகின்றது. இங்கு தன்னை ஒத்த புலவரின் உயிரைக் காப்பது மனிதநேயமாகும்.

### மலையமானின் மக்களைக் காத்து நிற்றல்

தன் எதிரியாகிய மலையமானை வென்று அவனுடைய மக்கள் இருவரையும் கிள்ளி வளவன் சிறைப்பிடித்தான். தன்னைப் போன்ற ஓர் அரசனின் இளம் மக்களை யானையைக் கொண்டு இடறச் செய்ய கிள்ளிவளவன் முற்பட்டான். இதனைக் கேள்வியுற்ற கோவூர் கிழார், சற்றும் தயங்காமல் மன்னனிடம் சென்று, நீ புறாவின் துன்பம் மட்டுமின்றிப் பிற உயிர்களின் துன்பத்தையும் தீர்த்த சோழனின் வழித்தோன்றல். அச்சிறுவர்களும் புலவர்களின் வறுமைக்குத் தம்மிடம் உள்ள பொருளைப் பகுத்துத் தரும் மரபில் வந்தவர்கள். அச்சிறுவர்கள் தம்மைக் கொல்லவரும் யானையைக் கண்ட அளவில் அழுகையை மறந்து நிற்கின்றனர். பலரும் கூடிய பொது மன்றத்தில் அச்சத்துடன் புதியதொரு வருத்தத்தை அவர்கள் அடைந்தனர். எம்மொழி கேட்பாயானால் நீ விரும்பியது செய்க என்று கூறுகின்றார். இக்கருத்தை,

**"நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகன்ன
..............................................................
கேட்டனை ஆயின், நீ வேட்டது
செய்ம்மே!"**

(புறம்.46;1-8)

என்ற அடிகளில் குறிப்பிடுகின்றார்.

'வேட்டது செய்ம்மே' என்னும் தொடரானது 'என் சொல் கேட்டால் நீ விரும்பியதைத் தவிர்வாய்' என்னும் குறிப்புடன் கூறியதாகும், பிறருக்கு உதவி செய்யும் மரபில் வந்தவர்கள் இத்தீங்கைச் செய்யலாமா என எடுத்துரைத்து சிறுவர்களின் உயிரைக் காத்து நிற்கின்றார். இவ்வாறு போரைத் தடுத்து, புலவரின் உயிரைக் காத்து, மலையமானின் மக்கள் உயிரைக் காத்து மனிதநேயம் மிக்க புலவராக விளங்கியவர் கோவூர் கிழார் என்பதை அறியமுடிகின்றது. "எதிரியின் குழந்தைகளைக் கொல்ல நினைத்த மன்னனுக்கு நன்னெறிகாட்டிப் பழியிலிருந்து காப்பாற்றிய சாணக்கியனாகக் கோவூர்கிழார் பெருமை பெறுகிறார்" (கொங்கும் தமிழும்,ப.63) என்று முனைவர் இரா.கா.மாணிக்கம் அவர்களும் இப்புலவரைப் போற்றுகின்றார்.

### பாணர்களின் துயரினைப் போக்குதல்

உடும்பினை உரித்தது போன்ற எலும்பு புடைத்து எழுந்த விலாப்பகுதியை உடைய சுற்றத்தின் பசியைத் தீர்க்கும் பொருட்டு பிறருடைய வாயிலை நினையாத வண்ணம்

மிகுதியாக வழங்கும் தன்மையுள்ள சோழன் நலங்கிள்ளியிடம் பாணர்களைச் செல்க என கோவூர்கிழார் அறிவுறுத்துகின்றார். இதனை,

"உடும்பு உரித்தன்ன என்பு எழு மருங்கின்
கடும்பின் கடும் பசி களையுநர்க் காணாது
.......................................................
பிறன் கடைமறப்ப, நல்குவன், செலினே"
(புறம்.68:1-19)

என்ற அடிகள் விளக்குகின்றன,

கிள்ளிவளவனை அடைந்தால் பொருள் பெறுவது உறுதியாகும். அதனால் பாணர்கள் விறலியுடன் சென்று பொருளைப் பெறுமாறு ஆற்றுப்படுத்துகின்றார். இதனை,

"தலைப்பாடு அன்று, அவன் ஈகை
நினைக்க வேண்டா; வாழ்க அவன்தாளே!"
(புறம். 70;18-19)

என்பதால் அறியமுடிகின்றது. பாணர்களின் பசியைப் போக்க நினைப்பது உயர்வுடையதாகும்.

"ஆண்டவனின் அன்பைப் பெற்று உய்வதற்கு முதலாவது தகுதி அன்பேயாகும். உயிர், மெய்யுடன் இணைந்து உருவாகிய மனிதன் உயர்நிலையை அடைய அன்பே உறுதுணையாகும். உருவ அமைப்பை உண்டாக்கிய எலும்புகளைத் தோல் மறைக்கின்றது. அன்பில்லாதவன் உயிரற்ற நடைப்பிணமாவான் அன்பு நீங்கியவன் மனிதனல்ல. அன்பே வாழ்வின் உயிராகும்" (வள்ளலாரும் வல்லநாட்டாரும், ப.9) என்று சு.அரங்கவிநாயகி அவர்கள் குறிப்பிட்டள்ள கருத்து இக்கோவூர் கிழாரின் செயலுக்குப் பொருந்துவதாய் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் சமாதானத்துக்காகப் பரிசுகள் கொடுக்கிறார்கள். அவ்வகையில் சங்ககாலத்து மக்களில் அப்பரிசுக்கு ஏற்றவராக ஒருவரைத் தேர்ந்து அவரை வருவித்து அளிக்கும் ஓர் அதிசயம் நிகழ்ந்தால் அதனை நிச்சயமாகக் கோவூர்கிழார் பெறுவார் என்பதில் ஐயமில்லை.

## நிறைவாக

சங்க காலப் புலவர்கள் மனித நேயத்தைத் தன் வாழ்க்கையில் உயர்வாகப் போற்றினர். பிறர் மனதை அறிந்து செயலாற்றினர்.அன்பை மூலதனமாகக் கொண்டு வாழ்ந்தனர் பிறருக்கு ஏற்படும் துயரினைத் தன் துயராக எண்ணினர் என்பதை இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது.

❖❖❖